**வகுப்பு : 8-ம் வகுப்பு**

**பாடம் : தமிழ்**

## இயல் - 9

## 1. உயிர்க்குணங்கள்

**I. குறுவினா.**

**1. மனிதர்களின் பொது இயல்பாய்க் கன்னிப்பாவை நூல் கூறுவது யாது?**

| | |
|---|---|
| அறிவு | எளிமை |
| ஆசை | பொறுமை |
| அச்சம் | நாணம் |
| அன்பு | அறம் |
| சினம் | பொறாமை |

ஆகியனவற்றை மனிதர்களின் பொது இயல்பாய்க் கன்னிப்பாவை நூல் கூறுகிறது.

**2. மனிதர்களிடம் உள்ள பண்புகளாய்க் கன்னிப்பாவை நூல் கூறுவனவற்றுள் நற்பண்புகள் யாவை?**

| | |
|---|---|
| அறிவு | அறம் |
| அன்பு | கருணை |
| எளிமை | இரக்கம் |
| பொறுமை | மேன்மை |
| ஊக்கம் | ஆராய்ந்து தெளிதல் |

ஆகியன மனிதர்களிடமுள்ள நற்பண்புகளாகும்.

**II. சிறுவினா.**

1. **மனிதர்களிடம் குவிந்திருக்கும் பண்புகளாய்க் கன்னிப்பாவை நூல் கூறுவன யாவை?**

மனிதர்களிடம் குவிந்திருக்கும் பண்புகள்

அறிவு, கருணை, ஆசை, அச்சம், அன்பு, இரக்கம், சினம், நாணம், மேன்மை, பொறாமை, எளிமை, நினைவு, துணிவு, இன்பம், துன்பம், பொறாமை, கொள்கையைப் பின்பற்றுதல், சோர்வு, மானம், அறம், வெறுப்பு, மகிழ்ச்சி, ஊக்கம், விருப்பம், வெற்றி, பகை, இளமை, முதுமை, மறதி, ஆராய்ந்து தெளிதல் ஆகியனவாகும்.

**III. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அடுத்தவர் வாழ்வைக் கண்டு ______________ கொள்ளக்கூடாது.

அ. உவகை　　ஆ. நிறை

**இ. அழுக்காறு**　　ஈ. இன்பம்

2. நாம் நீக்க வேண்டியவற்றுள் ஒன்று ______________.

**அ. பொச்சாப்பு**　　ஆ. துணிவு

இ. மானம்　　ஈ. எளிமை

3. 'இன்பதுன்பம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பன ______________.

அ. இனபம் + துன்பு　　**ஆ. இன்பம் + துன்பம்**

இ. இன்ப + அன்பம்　　ஈ. இன்ப + அன்பு

Next Generation School

4. குணங்கள் + எல்லாம் என்பனவற்றைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______________.

அ. குணங்கள் எல்லாம் ஆ. குணமெல்லாம்

இ. குணங்களில்லாம் **ஈ. குணங்களெல்லாம்**

5. 'பெண்ணரசி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பன ______________.

அ. பெண்ணு + அரசி **ஆ. பெண் + அரசி**

இ. பெண்ணே + அரசி ஈ. பெண்ண + அரசி

## IV. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ஆண்டாள் பாடிய நூல் ______________.

   திருப்பாவை.

2. திருவெம்பாவையை இயற்றியவர் ______________.

   மாணிக்கவாசகர்

## V. பொருத்துக.

1. நிறை - பொறுமை
2. பொறை - விருப்பம்
3. மதம் - மேன்மை
4. மையல் - கொள்கை

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 2. 1 | 3. 4 | 4. 2 |

Pinkz Public School Next Generation School

## 2. இளைய தோழனுக்கு

**I. குறுவினா.**

**1. கவலைகளைக் கவிஞர் எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?**

"கவலைகளைத் தூக்கிக்கொண்டு திரியாதே .........

அவை கைக்குழந்தைகளல்ல........."

என்று கவலைகளைக் கைக்குழந்தைகளாய்க் கவிஞர் உருவகப்படுத்துகிறார்.

**2. தோல்வி எப்போது தூண்டுகோலாகும்?**

உலகிற்கு ஒளியேற்ற எண்ணெயாய், திரியாய் உன்னையே நீ மாற்றினால் தோல்வியும் உன் உயர்விற்குத் தூண்டுகோலாகும்.

**II. சிறுவினா.**

**1. பூமி எப்போது பாதையாகும்?**

நாம் செயல்படத் தொடங்கினால் நாளை மட்டுமன்று, இன்றும் நமது நாள்தான்.

உன் பாதங்கள் நடக்கத் தயாராய் இருந்தால் நீ செல்லும் பாதைகள் உன்னை எதிர்க்கா; பூமியே உனக்குப் பாதையாய் மாறும்.

**III. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. உன்னுடன் நீயே ________________ கொள்.

அ. சேர்ந்து ஆ. பகை

இ. கை குலுக்கிக் ஈ. நட்பு

2. கவலைகள் _______________ அல்ல.

அ. சுமைகள் ஆ. சுவைகள்

இ. துன்பங்கள் **ஈ. கைக்குழந்தைகள்**

3. 'விழித்தெழும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பன _______________.

அ. விழி + எழும் **ஆ. விழித்து + எழும்**

இ. விழி + தெழும் ஈ. விழித் + தெழும்

4. 'போவதில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பன _______________.

**அ. போவது + இல்லை** ஆ. போ + இல்லை

இ. போவது + தில்லை ஈ. போவ + தில்லை

5. 'படுக்கையாகிறது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பன _______________.

அ. படுக்கை + யாகிறது ஆ. படுக்கையா + ஆகிறது

இ. படுக்கையா + கிறது **ஈ. படுக்கை + ஆகிறது**

6. தூக்கி + கொண்டு என்பனவற்றைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _______________.

அ. தூக்கிகொண்டு ஆ. தூக்குக்கொண்டு

**இ. தூக்கிக்கொண்டு** ஈ. தூக்குகொண்டு

7. விழித்து + எழும் என்பனவற்றைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _______________.

அ. விழியெழும் **ஆ. விழித்தெழும்**

இ. விழித்தழும் ஈ. விழித்துஎழும்

Pinkz Public School
Next Generation School

8. உன் விரல்களில் ஒளிரும் ________________.

அ. வெளிச்சவிதை ஆ. கைக்குழந்தை

**இ. சூரியவிளக்கு** ஈ. படுக்கை

9. தூங்கி விழுந்தால் பூமி உனக்கு ________________.

அ. சோலையாகிறது **ஆ. படுக்கையாகிறது**

இ. பாலையாகிறது ஈ. வானமாகிறது

**IV. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. வானம்பாடி இயக்கக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்

________________.

**மு. மேத்தா**

2. மு.மேத்தா எழுதிய ________________ நூலுக்கு சாகித்திய அகொதெமி விருது வழங்கப்பட்டது.

**ஆகாயத்துக்கு அடுத்த வீடு.**

3. புதுக்கவிதையைப் பரவலாக்கிய முன்னோடிகளுள் ஒருவராய்ப் போற்றப்படுபவர் ________________.

**மு. மேத்தா**

Next Generation School

# 3. சட்டமேதை அம்பேத்கர்

## I. குறுவினா.

**1. அம்பேத்கர் தம் பெயரை ஏன் மாற்றிக்கொண்டார்?**

அம்பேத்கர் சதாராவில் உள்ள பள்ளியில் தமது கல்வியைத் தொடங்கினார்.

இவர் ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர் என்பதால் பள்ளிப் பருவத்திலேயே பல அவமதிப்புகளுக்கு ஆளானார்.

மகாதேவ் அம்பேத்கர் என்ற ஆசிரியர், இவர்மீது அன்பும் அக்கறையும் கொண்டவராய் விளங்கினார்.

இதனால, பீமாராவ் சக்பால் அம்பவாதேகர் என்னும் தம் பெயரைப் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர் என்று மாற்றிக்கொண்டார்.

**2. தீண்டாமைக்கு எதிராய் அம்பேத்கர் மேற்கொண்ட பணிகள் இரண்டனை எழுதுக.**

அம்பேத்கர் இந்தியச் சமூக அமைப்பில் நிலவிய சாதியமைப்பையும் தீண்டாமைக் கொடுமைகளையும் எதிர்த்துத் தீவிரமாய்ப் போராடினார்.

ஒடுக்கப்பட்ட பாரதம் என்னும் இதழை 1927 ஆம் ஆண்டு தொடங்கினார்.

சமத்துவச் சமுதாயத்தை அமைக்கும் நோக்கில் இவர் சமாஜ் சமாத சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கினார்.

Next Generation School

**3. வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ளும் முன் அம்பேத்கர் கூறியது யாது?**

1930ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வதற்காகப் புறப்படும் முன், "என் மக்களுக்கு நியாயமாய் என்ன கிடைக்க வேண்டுமோ, அதற்காகப் போராடுவேன்; அதே சமயத்தில் சுயராஜ்ஜிய கோரிக்கைகளை முழு மனத்துடன் ஆதரிப்பேன்" என்று அம்பேத்கர் கூறினார்.

**II. சிறுவினா.**

**1. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக அம்பேத்கா ஆற்றிய பணிகள் யாவை?**

1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 29ஆம் நாள் அரசியல் நிர்ணய மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

அதன்படி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுத அம்பேத்கர் தலைமையில் அவர் உட்பட ஏழு பேர் கொண்ட அரசியலமைப்புச் சட்ட வரைவுக்குழு (Drafting Committee) உருவாக்கப்பட்டது.

இக்குழுவில் கோபால்சாமி, அல்லாடி கிருஷ்ணமூர்த்தி, கே.எம்.முன்ஷி, சையது முகமது சாதுல்லா, மாதவராவ், டி.பி.கைதான் ஆகியோர் உறுப்பினர்களாய் இடம் பெற்றனர். இக்குழு தனது அறிக்கையை 1948, பிப்ரவரி 21இல் ஒப்படைத்தது.

அம்பேத்கர் தலைமையிலான சட்ட வரைவுக் குழு, அப்போது மக்களாட்சி நடைபெற்ற நாடுகள் பலவற்றிலிருந்து இந்திய

நடைமுறைக்குப் பொருந்தும் சட்டக்கூறுகளை இந்திய அரசியலமைப்பு வரைவில் சேர்த்தது.

அம்பேத்கரால் உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் போற்றப்படுகிறது.

**2. அம்பேத்கரின் முதல் தேர்தல் வெற்றி குறித்து எழுதுக.**

1935ஆம் ஆண்டில் மாநில சுயாட்சி வழங்குவதற்கான இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி பொதுத்தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் நலனைப் பாதுகாக்கத் தேர்தலில் போட்டியிட அம்பேத்கர் விரும்பினார்.

அவர் சுதந்திரத் தொழிலாளர் கட்சியைத் தொடங்கித் தேர்தலில் போட்டியிட்டார்.

அம்பேத்கர் வெற்றி பெற்றதுடன் அவரின் கட்சி வேட்பாளர்கள் பதினைந்து பேரும் வெற்றி பெற்றனர்.

**III. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1 இந்தியாவின் முதல் சட்டம் அமைச்சர் ________________.

அ. இராதாகிருட்டிணன் **ஆ. அம்பேத்கர்**

இ. நெளரோஜி ஈ. ஜவஹர்லால் நேரு

2. பூனா ஒப்பந்தத்தின்மூலம் ____________ மாற்றி அமைக்கப்பட்டது.

அ. சொத்துரிமை ஆ. பேச்சுரிமை

இ. எழுத்துரிமை **ஈ. இரட்டை வாக்குரிமை**

3. சமத்துவ சமுதாயம் அமைய அம்பேத்கர் ஏற்படுத்திய இயக்கம்___.

**அ. சமாஜ் சமாத சங்கம்** ஆ. சமாத சமாஜ பேரவை

இ. தீண்டாமை ஒழிப்புப் பேரவை ஈ. மக்கள் நல இயக்கம்

4. அம்பேத்கரின் சமூகப் பணிகளைப் பாராட்டி இந்திய அரசு ______________ விருது வழங்கியது.

அ. பத்மபூ **ஆ. பாரத ரத்னா**

இ. பத்மவிபூசன் ஈ. பத்மபூசன்

5. இந்திய அரசியல் சாசனத்தின் தந்தை எனப் போற்றப்படுவர்_____.

அ. ஜவஹர்லால் நேரு ஆ. மகாத்மா காந்தி

**இ. அம்பேத்கர்** ஈ. சுபாஷ் சந்திரபோஸ்

6. முதலாவது வட்டமேசை மாநாட்டில், ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாளராய் அம்பேத்கருடன் கலந்துகொண்ட தமிழகத்தை சேர்ந்தவர் ______________.

**அ. இரட்டைமலை சீனிவாசன்** ஆ. பாரதியார்

இ. காமராசர் ஈ. ராஜாஜி

**IV. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. அம்பேத்கரின் இயற்பெயர் ______________.

**பீமாராவ் சக்பால் அம்பவாதேகர்**

2. அம்பேத்கர் அமெரிக்காவில் ______________ பல்கலைக் கழகத்தில் மேற்படிப்பு படித்தார்.

**கொலம்பியா**

3. புத்த சமயம் தொடர்பாக அம்பேத்கர் எழுதிய நூல் ___________.

**புத்தரும் அவரின் தம்மமும்**

4. அம்பேத்கர் நிறுவிய அரசியல் கட்சியின் பெயர் ______________.

**சுதந்தரத் தொழிலாளர் கட்சி**

5. பொருளாதாரப் படிப்பிற்காக அம்பேத்கர் _________ சென்றார்.

**இலண்டன்**

## 5. அணி இலக்கணம்

**I. 1. பிறிது மொழிதல் அணியை விளக்கி எடுத்துக்காட்டுத் தருக.**

உவமையை மட்டும் கூறி, அதன்மூலம், கூறவந்த கருத்தை உணர வைப்பது பிறிது மொழிதல் அணி எனப்படும்.

**(எ.கா.):** கடலோடா கால்வல் நெடுந்தேர்; கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து.

இத்திருக்குறள், "நிலத்தில் ஓடும் தேர், கடலில் ஓடாது; கடலில் ஓடும் கப்பல், நிலத்தில் ஓடாது" என்னும் உவமையை மட்டும் கூறுகிறது. இதன்மூலம் ஒவ்வொருவரும் தமக்கு உரிய இடத்தில் இருந்து வெற்றி பெற முடியும்; தமக்குப் பொருத்தமில்லாத இடத்தில் வெற்றி பெறுதல் இயலாது என்னும் கருத்தை நாம் உணர்ந்துகொள்கிறோம். எனவே, இக்குறட்பாவில் பிறிது மொழிதல் அணி இடம் பெற்றுள்ளது.

**2. வேற்றுமை அணி என்றால் என்ன?**

இரு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறி, பிறகு, அவற்றுள் ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமையணி எனப்படும்.

**(எ.கா.):** தீயினால் சுட்ட புண் உள்ளாறும்; ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

இத்திருக்குறளில் முதலில் நெருப்பு, கொடுஞ்சொல் ஆகிய இரண்டும் சுடும் தன்மை உடையவை என்று கூறப்படுகிறது. பின்னர், நெருப்பினால் சுட்ட காயம் ஆறிவிடும் உள்ளத்தில் ஏற்பட்ட வடு ஆறாது என்று இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாடு கூறப்படுகிறது. எனவே, இது வேற்றுமை அணி ஆகும்.

3. **இரட்டுற மொழிதல் அணி எவ்வாறு பொருள் தரும்?**

ஒரு சொல் அல்லது தொடர் இருபொருள் தருமாறு அமைவது இரட்டுற மொழிதல் அணியாகும். இதனைச் சிலேடை என்றும் கூறுவர்.

**(எ.கா):** ஓடும் இருக்கும் அதனுள்வாய் வெளுத்திருக்கும்
நாடுங் குலைதனக்கு நாணாது - சேடியே
தீங்காயது இல்லா திருமலைரா யன்வரையில்
தேங்காயும் நாயும்நேர் செப்பு.

இப்பாடலின் பொருளானது தேங்காய், நாய் ஆகிய இரண்டுக்கும் பொருந்துவதாய் அமைந்துள்ளது.

தேங்காயில் ஓடு இருக்கும்; தேங்காயின் உட்பகுதி வெண்மை நிறத்தில் இருக்கும்; தேங்காய் கோணல் இல்லாமல் குலையாய்த் தொங்கும்.

நாய் சில சமயம் ஓடிக்கொண்டிருக்கும்; சில சமயம் ஓரிடத்தில் படுத்து இருக்கும் அதன் வாயில் உட்பகுதி வெண்மையாய் இருக்கும்; குரைப்பதற்கு வெட்கப்படாது.

இவ்வாறு இப்பாடல், இருபொருள் தரும்படி பாடப்பட்டுள்ளதால் இஃது இரட்டுற மொழிதல் அணி ஆகும்.

**II. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பிறிது மொழிதல் அணியில் ______________ மட்டும் இடம் பெறும்.

**அ. உவமை** ஆ. உவமேயம்

இ. தொடை ஈ. சந்தம்

2. இரு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையையும் வேற்றுமையையும் கூறுவது ____________ அணி.

அ. ஒற்றுமை **ஆ. வேற்றுமை**

இ. சிலேடை ஈ. இரட்டுற மொழிதல்

3. ஒரே செய்யுளை இருபொருள்படும்படி பாடுவது__________ அணி.

அ. பிறிது மொழிதல் **ஆ. இரட்டுற மொழிதல்**

இ. இயல்பு நவிற்சி ஈ. உயர்வு நவிற்சி

4. இரட்டுற மொழிதல் அணியின் வேறு பெயர் __________ அணி.

அ. பிறிது மொழிதல் ஆ. வேற்றுமை

இ. உவமை **ஈ. சிலேடை**

5. 'சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்' - இத்தொடரில் அமைந்துள்ள அணி ____________.

அ. வேற்றுமை அணி ஆ. இரட்டுற மொழிதல் அணி

இ. உவமை அணி **ஈ. பிறிது மொழிதல் அணி**

6. "எந்த ஊருக்குப் பயணச்சீட்டு வேண்டும்?", "உன் காலில் எதனால் காயம் ஏற்பட்டது?" - இந்த இரு வினாக்களுக்கும் "செங்கல்பட்டு" என விடை கூறினால் அஃது என்ன அணி?

**அ. சிலேடை அணி** ஆ. வேற்றுமை அணி

இ. பிறிது மொழிதல் அணி ஈ. உருவக அணி

**III. கோடிட்ட இடத்தை நிரப்புக**

1. வெள்ளைச்சர்க்கரைக்கும் தேனுக்கும் இடையே ஒற்றுமையும் உண்டு, ________________ உண்டு.

**வேற்றுமையும்**

**IV. திருக்குறளில் அணிகள் இடம் பெற்றுள்ள குறட்பாக்களுள் ஐந்தனைக் கண்டறிந்து, அவற்றில் இடம் பெற்றுள்ள அணிகளின் பெயர்களை எழுதுக.**

1. கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.
-இக்குறட்பாவில் பிறது மொழிதல் அணி இடம் பெற்றுள்ளது.

2. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.
- இக்குறட்பாவில் உவமை அணி அமைந்துள்ளது.

3. சொல்லுக சொல்லைப் பிறிதொருசொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து.
-இக்குறட்பாவில் சொற்பொருள் பின்வருநிலையணி அமைந்துள்ளது.

4. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலம்தீமை யால்திரிந்து அற்று.
-இக்குறட்பாவில் உவமை அணி அமைந்துள்ளது.

5. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.
-இக்குறட்பாவில் ஏகதேச உருவக அணி அமைந்துள்ளது.

**V. கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.**

1. சிறுமி ______________ (தனது / தமது) கையில் மலர்களை வைத்திருந்தாள்.

**தனது**

Pinkz Public School
Next Generation School

2. அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காகத்

_______________ (தனது / தமது) உழைப்பை நல்கினார்.

**தமது**

3. உயர்ந்தோர் _________________ (தம்மைத்தாமே/தன்னைத்தானே) புகழ்ந்துகொள்ள மாட்டார்கள்.

**தம்மைத்தாமே**

4. இவை _________________ (தான் / தாம்) எனக்கு பிடித்த நூல்கள்.

**தாம்**

5. குழந்தைகள் ____________________ (தன்னால் / தம்மால்) இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்கின்றனர்.

**தம்மால்**

VI. கட்டுரை எழுதுக.

## உழைப்பே உயர்வு

முன்னுரை, உழைப்பின் அவசியம் , உழைப்பின் பெருமை, உழைப்பின் சிறப்பு, முடிவுரை.

### முன்னுரை

வாழ்க்கையில் நாம் முன்னேறுவதற்கு உண்மையான வழி என்னவென்றால் உழைப்புதான். உழைப்பே உண்மையான உயர்வைத் தரும். தன் கடமையைச் சரியாகச் செய்பவன் வாழ்வில் உயர்ந்த நிலையை அடைகிறான். உழைப்பின் சிறப்பையும், அதனால் கிட்டும் உயர்வையும்பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

### உழைப்பின் அவசியம்

உலகில் பிறந்த அனைவருமே வாழ்க்கையில் உயர வேண்டும், முன்னேற வேண்டும் என்று விரும்புகின்றனர். வாழ்வில் முன்னேற்றம் உயரவும் விரும்பினால் உயர்ந்த குறிக்கோள் ஒன்றை வரையறுத்துக்கொண்டு நாம் உழைக்கத் தயாராகிவிட வேண்டும்.

உழைக்காமல் உயர வேண்டும் என்று நினைத்தால் நிச்சயம் முன்னேற முடியாது. பொய் பேசுவது, ஏமாற்றுவது, திருடுவது போன்ற பழக்கங்கள்தாம் தவறாகும். ஆனால் எந்தத் தொழிலும் தாழ்வானது அன்று. எல்லோர் உழைப்பும் உயர்ந்ததே ஆகும்.

### உழைப்பின் பெருமை

பத்தடுக்க மாளிகையேயாயினும் ஒவ்வொரு செங்கல்லாகவே அடுக்கப்படுகிறது. ஒவ்வோர் அடுக்காகவே உயர்ந்த மாளிகை ஆகிறது. ஆகவே, நீங்கள் எடுத்துக்கொண்ட குறிக்கோள் எதுவாயினும் தொடர்முயற்சியும் விடாமுயற்சியும் வெற்றி என்னும் பெருமையைத் தரும்.

இதை நீங்கள் புரிந்துகொண்டால் உழைப்பின் பெருமையை உணர்ந்து செயல்படுவீர்கள்.

உழைப்பின்றிச் சோம்பேறிகளாய் இருப்பவர்கள் அதிர்ஷ்டத்தை நம்பி இருப்பார்கள். அதனால் அவர்கள் மேலும் கடன்பட்டு, மனிதப்பிறவியை மாசுப்படுத்திக்கொள்வார்கள். இன்னும் சிலர், குறுக்கு வழியில் திருட்டு, ஏமாற்று, கொலை, இலஞ்சம், ஊழல் போன்ற கொடுஞ்செயல்களில் ஈடுபட்டுப் பணம் சேர்க்க முயல்வார்கள். இவர்கள் சேர்க்கும் பணம், களவினால் ஆகிய ஆக்கம்; அஃது அளவிறந்து ஆவது போலக் கெடும்.

## உழைப்பின் சிறப்பு

இயற்கையானது ஒழுங்கின்மையையோ ஒழுங்கீனத்தையோ ஒரு போதும் சகித்துக் கொள்வதில்லை. சரியான நேரத்தில் சரியான முறையில் இயற்கை தன் நியாயத்தீர்ப்பை நேர்த்தியாய் வழங்கிவிடும்.

## முடிவுரை

நாம் செய்யும் தொழிலைத் தெய்வமாய் மதித்து, நம் வாழ்க்கையில் உழைத்தால் வெற்றி நிச்சயம் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். எந்த உழைப்பானாலும் சரி, அதை மரியாதையோடு நேசித்துச் செய்வோம். அது நிச்சயம் நம்மை உயர்த்தும்.

உழைப்போம் உயர்வோம்! நாட்டை வளப்படுத்துவோம்!

Next Generation School